Deposition of Witness

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE ATHOOR

**C.C.No.70/2021**

**Deposition of PW.7**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மசியுல்லா | ஜாதி | : |
| த/பெ | : வலியுல்லா | தொழில் | : மார்க்கெட்டிங் |
| கிராமம் | : ஆத்தூர் | சமயம் | : |
| தாலுகா | : | வயது | :26/2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.02.2023.

(Accused A1,A4 present. A2,A5, A6 absent filed petition U/s.317 Cr.P.C. allowed)

முதல் விசாரணை

நான் ஆத்தூரில் குடியிருந்து கொண்டு மார்க்கெட்டிங் தொழில் செய்து வருகிறேன். கடந்த 2021ம் வருடம் 8ம் மாதம் தேதி நியாபகம் இல்லை இரவு 08.30 மணியளவில் ஒரு வேலை விசயமாக செம்பட்டி காவல்நிலையத்திற்கு சென்றிருந்தபோது, அப்போது செம்பட்டி காவல் நிலைய ஆய்வாளர் கொள்ளை வழக்கு சம்பந்தமாக இரண்டு நபர்களை விசாரித்து கொண்டிருந்தார்கள் கரும்பாயிரம் (எ) மூர்த்தி என்பவரை விசாரணை செய்து கொண்டிருந்தபோது தானாக முன்வந்து மனபூர்வமாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த வாக்குமூலத்தில் ஆத்தூரில் இருந்து ஆதிலட்சுமிபுரம் இடையில் ஒரு இரண்டு சக்கர வாகனம் மற்றும் செல்போன்களை 6,7 நபர் சேர்ந்து கொள்ளை அடித்ததாக சொன்னார். பின்னர் மற்றொரு நபரிடமும் காவல் ஆய்வாளர் விசாரணை செய்தபோது அவரும் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். மேற்படி இரண்டு ஒப்புதல் வாக்குமூலத்திலும் சாட்சியாக நானும், ராபர்ட் என்பவரும் கையொப்பம் செய்தோம். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் எதிரிகளுடன் நாங்களும் அனுமந்தராயன்கோட்டை அருகே கிணற்றிற்கு அருகே மறைத்து வைத்திருந்த ஒரு அருவாள், சுமார் 6 பைக், 1 செல்போன் ஆகியவற்றை எதிரிகள் எங்களது முன்னிலையில் ஆஜர் செய்ததை அத்தாட்சியில் ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும் ராபர்ட் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள பொருட்கள் தான் மேற்படி எதிரிகளிடம் இருந்து கைப்பற்றிய பொருட்களில் ஒரு பகுதி ஆகும். மேற்கண்ட சி.டி. யுடன் கூடிய புகைப்படம் (3 எண்ணிக்கை) அ.சா.ஆ.3 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் 1 முதல் 6 வரையிலானவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

P JAISANKAR Digitally signed by P JAISANKAR

District Munsif Cum Judicial Magistrate,
Athoor.